# நான் என்ன செய்ய வேண்டும்?

**தொடர் - 60**

அக்டோபர் 2013

*தொகுப்பு :* **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

**மத்தேயு**

2951 பிறனுடைய மனைவியை வைத்துக் கொள்வது நியாயமல்ல (14:4)

2952 அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்? (14:31)

2953 உன் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை மீறி நடவாதே (15:3), அவமாக்காதே (15:6)

2954 உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணு (15:4,5)

2955 தகப்பனையாவது தாயையாவது நிந்தியாதே (15:5)

2956 உன் வாயினால் தேவனிடத்தில் சேர்ந்தும், உதடுகளினால் அவரைக் கனம் பண்ணியும் இருதயத்தால் அவருக்குத் தூரமாய் விலகியிருக்கலாமோ? (15:8)

2957 மனுஷனுடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் தேவனுக்கு ஆராதனை செய்யாதே (15:9)

2958 உன் வாயிலிருந்து/இருதயத்திலிருந்து புறப்படுகிறவைகளாகிய பொல்லாத சிந்தனைகள், கொலை பாதகங்கள், விபசாரங்கள், வேசித்தனங்கள், களவுகள், பொய்ச்சாட்சிகள், தூஷனங்கள் உன்னைத் தீட்டுப்படுத்தாதிருப்பதாக. (15:18,19)

2959 தேவன் செய்யும் அற்புதங்களைக் கண்டு, அவரை மகிமைப்படுத்து (15:31)

2960 மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தி. (16:23)

2961 "ஒருவன் என்னைப்பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (16:24)

2962 விசுவாசத்தோடு ஜெபி (17:20)

2963 சில ஜாதிப் பிசாசைத் துரத்த ஜெபமும் உபவாசமும் செய் (17:21)

2964 "நீ மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டாய்" (18:3)

2965 நீ பிள்ளையைப் போல் உன்னை தாழ்த்து (18:4)

2966 தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கிற ஒருவனுக்கு இடறல் உண்டாக்காதே (18:6-9)

2967 ஒருவனையும் அற்பமாய் எண்ணாதே (18:10)

2968 உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து, அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய். அவன் செவிகொடாமற்போனால், இரண்டொருவரை உன்னுடன கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவிகொடாடமற் போனால் அதைச் சபைக்குத் தெரியப்படுத்து. (18:15-17)

2969 நீங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தும் பூமியிலே ஒருமனப்பட்டிருங்கள்; அது பிதாவினால் அவர்களுக்கு உண்டாகும். (18:19)

2970 உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், எத்தனைதரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதர மட்டுமோ? ஏழுதர மாத்திரம் அல்ல, ஏழெழுபதுதர மட்டும். (18:21,22)

2971 தேவன் உனக்கு இரங்கினது (மன்னித்தது) போல நீயும் பிறனுக்கு இரங்கி (மன்னிக்க) வேண்டாமோ? (18:33)



2972 நீ உன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற் போனால், பரமபிதாவும் உனக்கு அப்படியே செய்வார் (18:35)

2973 தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்ககடவன் (19:6)

2974 தன் மனைவியை வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணாதே. அது விபசாரம். தள்ளி விடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான் (19:9)

2975 சிறுபிள்ளைகள் இயேசுவினிடத்தில் வருகிறதற்கு இடங்கொடு; அவர்களைத் தடைபண்ணாதிரு (19:14)

2976 நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் (19:17

2977 உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக (19:19, 22:39, மாற். 12:31,33, லூக். 10:27)

2978 ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருககும் (19:24)

2979 "என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையால் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்" (19:29)

2980 உன்னுடையதை நீ வாங்கிக் கொண்டு போ (20:14)

2981 "நான் தயாளனாயிருக்க நீ வன்கண்ணனாயிருக்கலாமா?" (20:15)

2982 நீ பெரியவனாயிருக்க விரும்பினால், பனிவிடைக்காரனாயிரு (20:26)

2983 நீ முதன்மையானவனாயிருக்க விரும்பினால், ஊழியக்காரனாயிரு (20:27)

2984 என்னுடைய வீட்டைக் கள்ளர் குகையாக்காதே (21:13)

2985 நீ சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவனாயிரு (21:21)

2986 நீ விசுவாசமுள்ளவனாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பாயோ அவைகளையெல்லாம் பெறுவாய் (21:22)

2987 தேவனுடைய ராஜ்யத்திற்கேற்ற கனிகளைத் தா (21:43)

2988 நீ அழைக்கப்பட்டால் (திருமணத்திற்கு) அதை அசட்டைப் பண்ணாதே (22:5)

2989 துர்க்குணம் வேண்டாம் (22:18)

2990 இராயனுடையதை இராயனுக்கும் தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்து. (22:21, மாற். 12:17, லூ. 20:25)

2991 தப்பான எண்ணங்கொள்ளாதிருக்க வேத வாக்கியங்களையும் தேவ வல்லமையையும் அறி. (22:29, மாற். 12:24)

2992 உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக (22:37, மாற். 12:30,33, லூ. 10:27)

2993 கைக்கொள்ளும்படி வேதபாரகரும் பரிசேயரும் உனக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்; அவர்கள் செய்கையின் படியோ செய்யாதிரு (23:3)

2994 உன் கிரியைகளையெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று செய்யாதே (23:5)

2995 "ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்" (23:8

2996 "பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்;

8ம் பக்கம் பார்க்க

# ஜெபம் ஜெபம் ஜெபம்

சகோ. B. பொற்செல்வன் ஆசீர்

- ஜெபம் ஜெபம் ஜெபம் நமது முதல் மற்றும் கடைசித் தேவை.
- ஜெபம் என்பது தேவனோடு பேசுதல்.
- ஜெபம் என்பது தேவனோடு மனிதன் வைத்துக் கொள்ளும் ஐக்கியம் அல்லது தொடர்பு
- ஜெபம் என்பது தேவனும் மனிதனும் சந்திக்கும் அற்புதத்தின் வாசல்.
- ஜெபம் என்பது மனிதன் தேவனோடு பேசுவது மாத்திரமல்ல, இது தேவன் மனிதனோடு பேசுவதும் தான்.
- ஜெபம் என்பது உலகம், மாமிசம், பிசாசை நடுங்க வைக்கும் வல்லமையான ஆயுதம்
- ஜெபம் என்பது பாவம் செய்யாதபடி தடுக்கும் தடைக்கல்.
- ஜெபம் என்பது நான் என்னும் சுயத்தை ஜெயித்து எல்லாம் இயேசுவே என வாழும் வாழ்விற்கு வித்து.
- ஜெபம் என்பது மனம் திரும்பிய பாவியின் கண்ணீர்.
- ஜெபம் என்பது ஆத்தும பசி தீர்க்கும் ஆனந்த மன்னா.
- ஜெபம் என்பது பரலோக வாசலை தட்டும் சப்தம்.
- ஜெபம் என்பது தேவனுடைய கரங்களை அசைக்கும் அற்புதம்.
- ஜெபம் என்பது அழியும் ஆத்துமாக்களுக்காக செய்யும் முழங்கால் யுத்தம்.
- ஜெபம் எழுப்புதலைக் கொண்டு வரும் மழை மேகம்.
- ஜெபம் தேவகோபம் என்னும் அக்கினியை தணிக்கும் மழை.
- முழங்கால் ஜெபத்தில் போராடாதவன் தன் வாழ்வில் ஊழியத்தில் ஒரே போராட்டம் என்பான்.
- ஜெபம் கிருபை என்னும் அக்கினியை மூட்டும் காற்று.
- ஜெபம் என்பது தேவனை மனதுருகச் செய்யும் மன்றாட்டு.
- ஜெபம் என்பது தேவனிடத்தில் உதவி கேட்பது மட்டுமல்ல தேவனோடு உறவாடுவதும் ஆகும்.
- ஜெபம் விசுவாசத்தை அறிக்கையிடுகிறது. கவலை விசுவாசத்தை மறுதலிக்கிறது.
- ஜெபத்தினால் நாம் ஜெயிக்க கற்றுக்கொள்ளுகிறோம்.
- ஜெபத்தின் இரகசியம் இரகசியமாய் ஜெபிப்பது உங்கள் அறைவீட்டு ஜெபங்கள் சாத்தானை தாக்கும் அதிரடி தாக்குதல்கள்.
- உண்மையாய் ஜெபிப்பவன் உண்மையாய் நடப்பான்.
- பரிசுத்தம் ஜெபத்திற்கு அவசியம் பரிசுத்த ஆவியானவர் ஜெப வாழ்வில் அத்தியாவசியம்.
- ஜெபிக்கிறவன் கவலைப்பட மாட்டான். கவலைப்படுகிறவன் ஜெபிக்க மாட்டான்.
- விசுவாசமுள்ள ஜெபம் மலைகளை பெயர்க்கும்.
- ஜெபிக்கிறவனைக் கண்டு சாத்தான் நடுங்குவான். ஜெபிக்காதவன் சாத்தானைக் கண்டு நடுங்குவான்.
- உதட்டின் முனையில் பிறப்பது ஜெபமல்ல. உள்ளத்தின் நிறைவில் பிறப்பது ஜெபம்.
- எதிர்பார்ப்போடு ஜெபியுங்கள்! ஜெபித்தபின் எதிர்பாருங்கள்.
- ஜெபமாகிய கோல் துன்பமென்னும் கற்பாறையினின்று ஆசீவாதமென்னும் நீரூற்றை புறப்படச் செய்யும்.
- வியாபாரிக்கு மூலதனம் மிகவும் அவசியம். விசுவாசிக்கு ஜெபம் மிக மிக அவசியம்
- ஜெபிக்க திட்டமிடுவது ஜெபிப்பது அல்ல.
- ஜெபத்தை குறித்து பிரசங்கிப்பதால் ஜெபவீரன் என்று பொருள் அல்ல.
- ஜெபிக்காத பிரசங்கி ஜெயிக்காத வீரன்.
- ஜெபித்து பிரசங்கி, பிரசங்கித்து ஜெபி; ஜெபத்தோடு பிரசங்கி அப்போது ஜெயத்தின் மேல் ஜெயம் வரும்.
- பணத்தில் இருக்கும் நோக்கம் ஜெபத்தில் இல்லாமல் போவது தான் இன்றைய எழுப்புதலின் மிகப் பெருந்தடை.



# முன் மாதிரியாய்

சகோ. S. ஜெபராஜ் President, Grace Ministries

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். வேத வசனங்களெல்லாம் தேவஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது. 2தீமோ. 3:16. தேவனுடைய சத்திய வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது (யோவா. 6:63). பிரியமுள்ள குமாரன் என்று அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுலினால் அழைக்கப்பட்ட தீமோத்தேயு என்ற வாலிபனுடைய நல் நடக்கைகளையும் விசுவாசத்தையும் குறித்து வேதத்தில் வாகிக்கிறோம். அவைகளை அவர் தன் பாட்டியிடமும் தாயாரிடமும் இருந்து கற்றுக்கொண்டார். “அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது. அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்” (2தீமோ. 1:5). விசுவாசத்தில் உத்தம குமாரன் என்று தீமோத்தேயுவுக்கு அடைமொழி கொடுக்கப்பட்டிருந்தது. (1தீமோ. 1:2)

குடும்பங்களில் பெற்றோரின் நல் நடக்கைகள், பரிசுத்தம், அன்பு, தெய்வபயம், தெய்வீக பக்திவிருத்தி, நல்மனச்சாட்சி இவைகள் குடும்பத்தின் பிள்ளைகளின் மீதும், பிள்ளைகளின் பிள்ளைகள் மீதும் தாக்கத்தை உண்டாக்குகிறது. எனவே பெற்றோர் எதிர்கால சந்ததிக்கு இவ்வித நற்பண்புகளை கொடுப்பதற்கு ஜாக்கிரதை உள்ளவர்களாயிருக்க வேண்டும்.

**1. நடக்கை** - Way of life

முற்காலத்திலே நாமெல்லாரும் நமது மாம்ச இச்சையின்படியே நடந்து நமது மாம்சமும் மனதும் விரும்பினவைகளைச் செய்து சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம் (எபேசி. 2:3). முந்தின நடக்கைக்குரிய மோசம் போகும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள் (எபேசி. 4:22-24) என்று எபேசியர் திருச்சபையினருக்கு கொடுக்கப்பட்ட ஆலோசனையின்படி நீங்களும் நடந்து கொள்ள தேவன் விரும்புகிறார். உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்கள் (1பேது. 1:18,19). மீட்கப்பட்ட நல்நடத்தை சந்ததி, சந்ததியாய் பின்பற்றப்பட வேண்டும் புறஜாதிகள் தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள் (1பேது. 2:12). குடும்பங்களில் போதனையின்றி பயபக்தியோடுகூடிய கற்புள்ள நடக்கையினாலே ஒருவர் மற்றவரை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிற அனுபவத்திற்குள்ளாய் ஒவ்வொருவரும் கடந்துவர வேண்டும். உங்களுடைய ஒவ்வொரு நடக்கையும் உங்கள் குடும்பத்தினரையும் அயலகத்தாரையும் கிறிஸ்துவுக்குள் ஆதாயப்படுத்துகிறதாய் அமைய வேண்டும். பிள்ளையானாலும் அதின் செய்கை சுத்தமோ செம்மையோ என்பது அதின் நடக்கையினால் விளங்கும் (நீதி. 20:11). உங்கள் நடக்கையை சீர்படுத்துங்கள் (எரே. 35:15) பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து கற்றுக்கொள்ளவும், பின்பற்றவும் வாய்ப்புகளை உருவாக்குங்கள்.

**2. நற்கிரியை** - Good Works

நீங்கள் பூமிக்கு சாரமுள்ள உப்பாய், உலகத்திற்கு வெளிச்சமாய், தண்டின்மேல் ஏற்றி வைக்கப்பட்ட வெளிச்சம் கொடுக்கிற விளக்காய் இருக்கிறீர்கள் (மத் 5:13-15). இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக் கடவது. (மத். 5:16). இயேசு அவர்களை நோக்கி, நான் பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்கு காண்பித்தேன் (யோ. 10:32) என்கிறார். சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து தேவனை அறிகிற அறிவில் விருத்தி அடைந்து கர்த்தருக்கு பிரியமுண்டாக அவருக்கு பாத்திரராய் நடந்து கொள்ளுங்கள் (கொலோ. 1:10). நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார் (எபேசி. 2:10). சற்று நம்முடைய கிரியைகளைச் சிந்தித்துப் பார்ப்போம். நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடைய வர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார் (2கொரி. 9:8) உங்கள் குடும்ப வாழ்க்கையிலும், சமுதாய வாழ்க்கையிலும் உங்கள் நற்கிரியை முன்மாதிரியாகவும், மற்றவர்களால் பின்பற்றப்படத்தக்கதாகவும் பின்சந்ததியார் அதே அனுபவத்தில் கடந்து வர நீங்கள் அவர்களுக்கு கொடுக்கிற சொத்தாகவும் அமையவேண்டும். தேவன் உங்கள் இருதயங்களைத் தேற்றி எல்லா நல்வசனத்திலும் நற்கிரியைகளிலும் உங்களைத் ஸ்திரப்படுத்துவார் (2தெச. 2:17). எனவே நற்கிரியைகளினால் உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள் (1தீமோ. 2:10) நற்கிரியைகளை குறித்து நற்சாட்சி பெற்றவர்களாயிருங்கள் (1தீமோ. 5:10). நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாயிருங்கள். (1தீமோ. 6:18).

**3. மாயமற்ற விசுவாசம்** - Honest & True faith

இயேசுவானவர் உங்களில் விரும்புவது மாயமற்ற உண்மைநிறைந்த வாழ்க்கை. வாழ்வின் ஒவ்வொரு பகுதியும் மாயமற்ற தன்மை உள்ளதாகக் காணப்பட வேண்டும். இரட்டை வேடம் போடுகிறவர்களாக அல்ல, மனுஷருக்கு முன்பாகவும், தேவனுக்கு முன்பாகவும் உண்மையோடு நடந்து கொள்ளுங்கள். மாய்மாலம் செய்கிறவர்களாகவும், மாயக்காரரைப்போலவும் வாழ வேண்டாம். மாயக்காரரைக் குறிதாது இயேசு 'ஐயோ' என்று உரைத்திருக்கிறார் (மத். 23:13). உங்கள் ஜெபம், உபவாசம், தர்மம் ஆகியவை மாயக்காரர் செய்வதுபோல இருக்க வேண்டாம் (மத். 6:2,5,11) மனுஷனுடைய மாயத்தை அவர் அறிவார் யோபு 11:11). மாயம்பண்ணுகிறவன் மூடன் (ஏசா 32:6). எனவே உங்களுடைய விசுவாசம் மாயமற்றதாக இருக்க வேண்டும். வெளியில் விசுவாசியின் வேஷத்தை தரித்துக்கொண்டு உள்ளான வாழ்க்கையில் வேறுவிதமாய் வாழ்ந்து கொண்டிருத்தால் பரிதபிக்கப்பட்டவர்களாயிருப்போம். உங்களுடைய விசுவாசம் நேர்மையானதாகவும், உண்மையானதாகவும் உங்கள் சந்ததியாரால் பின்பற்றத்தக்க முன்மாதிரியான விசுவாசமாகவும் இருப்பதாக.

எனது தீர்மானம் : தீமோத்தேயுவைப்போல, முன்னோர்களின் பெற்றோர் - நல்நடக்கை, நற்கிரியை விசுவாசம் போன்றவற்றை என் வாழ்வின் முன்மாதிரியாக நோக்கி பின்பற்ற தீர்மானிக்கிறேன்.



# 1தெசலோனிக்கேயர்

**Dr. பொ. செல்வராஜ்** கோவை

ஆதாரம் : HALLEY'S BIBLE HAND BOOK

தெசலோனிக்கே சபையானது பவுலின் இரண்டாவது அருட்பணி பயணத்தின்போது, கி.பி. 51ம் ஆண்டு நிறுவப்பட்டது. பவுலால் போதிய நாட்களுக்கு தெசலோனிக்கேயர் சபையாரோடு இருந்து அவர்களுக்கு முழுமையாகக் கற்றுக்கொடுக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டது. வளர்ந்து வரும் தெசலோனிக்கேய சபையைப் பற்றிய ஆர்வத்தினால் பவுல் தன்னுடைய உடன் ஊழியரான தீமோத்தேயுவை தெசலோனிக்கே சபைக்கு திரும்பவும் அனுப்பினார். சென்றுவந்த தீமோத்தேயு பவுலிடம் தெசலோனிக்கேயர் சபையார் துன்புறுத்தல்களைத் துணிவுடன் பொறுத்துக் கொள்ளுகிறார்கள் எனும் அறிக்கையைக் கொடுத்தார். அதோடு அவர்கள் இறந்தவர்கள் கர்த்தருடைய வருகையின் பயனை அடைவார்களா எனும் ஐயப்பாடு உள்ளவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய ஐயப்பாட்டை நீக்கும் வகையில் பவுல் இந்த மடலை அவர்களுக்கு எழுதினார். ஹாலே வேதாகமக் கையேடு 1தெசலோனிக்கேயர் புத்தகத்துக்கு "கர்த்தருடைய இரண்டாம் வருகை" எனும் தலைப்பைக் கொடுக்கிறது.

**அதிகாரம் 1** - இந்த அதிகாரத்திற்குக் கையேடு "தெசலோனிக்கே சபையின் புகழ்" எனும் உள்தலைப்பைக் கொடுக்கிறது. புகழ் என்பது பவுலின் அருளுரையைத் தொடர்ந்த அற்புதங்கள் கிரேக்க தேசத்திலேயே சபைக்கு முன்மாதிரியாக இருந்தது. துன்புறுத்தல்களின் நடுவில் சபையாருக்கு இருந்த உறுதி மற்றும் நல்லதோர் கிறிஸ்தவ வாழ்க்கை குறிப்பிடத்தக்கவை.

**அதிகாரம் 2** - இந்த அதிகாரத்துக்கு "பவுலின் அணுகுமுறை" எனும் உள்தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. விசுவாசமில்லாத யூதர்களும், வேறுசிலரும் பவுலை பட்டணத்திலிருந்து துரத்தியதோடு சபையாரை துன்புறுத்திக் கொண்டிருந்தார்கள். சபையாரை தான் மீண்டும் சந்திக்க வேண்டும் என்பதற்காக பவுல் இரவும் பகலும் ஜெபித்துக் கொண்டிருந்தார். கர்த்தருடைய வருகையின்போது சபையானது அவர்களுடைய நம்பிக்கையும், மகிழ்ச்சியும், கிரீடமும், மகிமையுமாக இருக்கும் என்பது அவர்களுடை எதிர்பார்ப்பு

**அதிகாரம் 3** - இதற்கு "தீமோத்தேயுவின் அறிக்கை" எனும் தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. பவுலின் அறிவுரையின் பேரில் சபைக்குச் சென்று வந்த தீமோத்தேயு கொடுத்த அறிக்கை சபையாரின் உறுதியையும் அர்ப்பணிப்பையும் மையமாகக் கொண்டிருந்தது பவுலுக்கு பெரும் மகிழ்ச்சியைத் தந்தது.

**அதிகாரம் 4** - இதற்கான உள்தலைப்பில் அன்பு, பாலியல் பாவங்கள் மற்றும் கிறிஸ்துவின் வருகை ஆகிய மூன்றும் இடம் பெருகின்றன. முதல் பகுதியில் பாலியல் தூய்மை வலியுறுத்தப்படுகிறது (வசனம் 1-8). இரண்டாவது பகுதி சகோதர அன்பை ஒரு காரணமாக வைத்துக் கொண்டு உழைக்காமல் இருந்தது சபைக்கு வெளியே இருப்போரிடையே ஒரு கெட்ட பெயரை உண்டாக்கிறது (9-12). மூன்றாவது பகுதியில் புத்தகம் முழுவதும் குறிப்பிடப்படுகிற கர்த்தருடைய வருகை இடம் பெறுகிறது. (13-18)

**அதிகாரம் 5** - இதின் தலைப்பு புத்தகத்தின் பொதுத் தலைப்பே. முதல் பகுதியில் (1-11 வசனம்). இரண்டாம் வருகை எப்போது என்பது நமக்குத் தெரியாது. எப்போது இருந்தாலும்

அது எதிர்பாராமல் திடீரென்று நிகழும். ஆனாலும், வருகைக்கு முன்பு அடையாளங்கள் தோன்றும் என்பதால் பொறுமையோடு இருக்கும் விசுவாசிகளுக்கு வருகை மிகவும் அருகில் என்பது தெரிந்து விடும். உலகத்தாருக்கு அது தெரியாது. இரண்டாவது பகுதி (12-13) சபையின் போதகர்கள் புதியவர்களாயிருந்தாலும் சபையார் அவர்களை அன்புடன் மதிக்க வேண்டும் எனும் அறிவுரையாக இருக்கிறது. அத்தகைய சபைகள் வளருவது நிச்சயம். மூன்றாவது பகுதியில் 15 அறிவுரைகள் இடம் பெறுகின்றன (14-22). நிறைவாக, சபையில் மடல் வாசிக்கப்பட வேண்டும் என்பது பவுலின் விருப்பமாயிருந்தது என்பதைக் காணலாம்.

ஆதாரம் : **MATHEW HENRY'S COMMENTARY**

*(விளக்கவுரையின் முன்னுரையின்படி உபதேசத்தை விட ஆறுதலும், அறிவுரையும் அடங்கிய மடல் 1தெசலோனிக்கேயர் ஆகும்)*

**அதிகாரம் 1** - இது இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பகுதி சபையாரின் விசுவாசம், அன்பு மற்றும் பொறுமையைப் பற்றியது. தூய ஆவியின் வல்லமையோடு தேவனுடைய வார்த்தையை சபையார் அறிந்து வைத்திருந்தனர். இரண்டாவது பகுதி தேவனுடைய வார்த்தையின் வல்லமையினால் சபையாரின் இதயங்களிலும், வாழ்க்கையிலும் ஏற்பட்ட விளைவுகளைப் பற்றியது. பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் மேசியாவின் வருகைக்காகக் காத்திருந்தனர். இன்றைய விசுவாசிகளாகிய நாம், அவருடைய இரண்டாம் வருகைக்காகக் காத்திருக்கிறோம்.

**அதிகாரம் 2** - முதல் 6 வசனங்களை பகுதி ஒன்று என்று கூறலாம். இப்பகுதியில் அப்போஸ்தலர் ஊழியத்தில் உண்மையுடன் செயல்பட்டதைப் பார்க்க முடிகிறது. இரண்டாவது 6 வசனங்களை இரண்டாவது பகுதி என்று அழைக்கலாம். நாம் நம்முடைய உன்னதமான அழைப்பிற்கேற்ப தேவனுக்கு உகந்தவர்களாக வாழ வேண்டும் என்பதே இப்பகுதியின் கருப்பொருள் ஆகும். மூன்றாவது பகுதி (13-16) அருளுரையைத் தடை செய்பவர்கள் தேவனுடைய மகிமைக்கும் அவருடைய மக்களின் இரட்சிப்பிற்கும் எதிராக செயல்படுபவர்கள் என்று கூறுகிறது. நான்காவது பகுதி (17-20) தூய ஆத்துமாக்கள் பரலோகத்தில் சந்திக்கும் என்பதும் அதன்பிறகு அவை பிரியாது என்பதும் இப்பகுதியின் மையக் கருத்தாகும்.

**அதிகாரம் 3** - முதல் பகுதியில் (1-5) சபையாரைத் தேற்றவும் உறுதிப்படுத்தவும் பவுல் தீமோத்தேயுவை அனுப்பியதைப் பற்றி வாசிக்கிறோம். இரண்டாவது பகுதியில் (6-10). சபையாரின் விசுவாசம் மற்றும் அன்பைப்பற்றிய செய்திகளைக் கேட்டு பவுல் மகிழ்ச்சி

3ம் பக்க தொடர்ச்சி

பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்" (23:9)

2997 "நீங்கள் குருக்கள் என்று அழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்" (23:10)

2998 "உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன்" (23:11)

2999 உன்னை உயர்த்தாதே; தாழ்த்தப்படுவாய். உன்னைத் தாழ்த்து; உயர்த்தப்படுவாய் (23:12

3000 தேவாலயத்தின் பேரிலும் (23:16,17,21), பலிபீடத்தின் பேரிலும் (23:18,19) வானத்தின் பேரிலும் (23:22) சத்தியம் பண்ணாதே.



அடைகிறார் என்று பார்க்கிறோம். நிறைவாக மூன்றாவது பகுதியில் (11-13) தூய ஆவியானவரின் உதவியோடு நாம் தேவனுடைய கிருபையில் பலப்பட வேண்டும் எனும் செய்தி அடங்கியுள்ளது.

**அதிகாரம் 4** - தூய்மையான வாழ்க்கைக்கான அறிவுரைகள் முதல்பகுதியில் (1-8) அடங்கியிருக்கின்றன. அறிவுரைகளை மனிதர்கள் வழங்கினாலும் உண்மையிலேயே அவைகள் தேவனுடைய கட்டளைகள், இரண்டாவதுபகுதி (9-18) சகோதர அன்பு, சமாதானம் மற்றும் விவேகமுடன் வாழ்வதற்கான அறிவுரைகளைப் பற்றியது. கிறிஸ்தவம் நம்மைக் கடமையிலும், உழைப்பிலும் இருந்து பிரிப்பதில்லை. மூன்றாவது பகுதி (13-18) உயிர்த்தெழுதல் மற்றும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, மரணம் அடைந்தவர்களைப்பற்றிய துக்கத்திலிருந்து நம்மை பாதுகாக்கும் என்று அறிகிறோம்.

**அதிகாரம் 5** - கிறிஸ்துவின் வருகை நாம் எதிர்பாராத நேரத்தில் நிகழும் என்று நம்முடைய கர்த்தரே கூறியிருக்கிறார். இதைக் குறித்து பகுதி 1ல் நாம் வாசிக்கிறோம் (1-5). இரண்டாவது பகுதி (6-11) நற்செய்தியின் ஒளியால் பிரகாசிக்கப்பட்ட முகங்களுடைய நாம் நம்முடைய ஆத்துமாக்களைக் குறித்தும், மறுமையைக் குறித்தும், கவனமற்றவர்களாக இருக்கலாமா எனும் கேள்வியை எழுப்புகிறது. மூன்றாவது பகுதியின்படி (12-15) ஊழியர்கள் ஆலோசனை தருவதோடு நின்றுவிடாமல் எச்சரிப்பு கொடுக்கிறவர்களாகவும், கண்டித்துணர்த்துகிறவர்களாகவும் இருக்க வேண்டும். சபையார் ஊழியர்களை அன்புடன் மதிக்க வேண்டும். நான்காவது பகுதியில் (16-22) உண்மையான ஆவிக்குரிய வாழ்க்கை பெருமகிழ்ச்சி தரும் வாழ்க்கை என்பது உள்ளிட்ட பல அறிவுரைகளை நாம் காண்கிறோம். நிறைவுப்பகுதியில் (23-28) என்றும் பொங்கிவழிகின்ற ஊற்றான தேவகிருபையின் பல அம்சங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**அதிகாரம் 1**

1. தெசலோனிக்கேயருக்கு இருந்த நம்பிக்கையைப் பவுல் எவ்வாறு தகுதிப்படுத்துகிறார் (1:3 அ)
2. தெசலோனிக்கேயரின் உழைப்பு எதனால் உந்தப்பட்டது என்று பவுல் கூறுகிறார்? (1:3 ஆ)
3. இயேசுகிறிஸ்துவை எதிர்நோக்கியிருந்த தெசலோனிக்கேயருக்கு என்ன கிடைத்தது? (1:3 இ)
4. தெசலோனிக்கேயருக்கு நற்செய்தி எவ்வாறு அறிவிக்கப்பட்டிருந்தது? (1:5)
5. வேதனை நடுவில் தெசலோனிக்கேயரால் இறைவார்த்தையை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடிந்தது? (1:6அ)
6. இறைவார்த்தையை ஏற்றுக்கொண்ட தெசலோனிக்கேயரில் ஏற்பட்ட மாற்றம் என்ன? (1:6ஆ)
7. தெசலோனிக்கேயரை தேவனிடமிருந்து திரும்பி வந்தவர்கள் என்று பவுல் கூறக்காரணம் என்ன? (1:9)
8. தெசலோனிக்கேயர் எதற்காகக் காத்திருந்தார்கள்? (1:10)

**அதிகாரம் 2**

1. பெரும் எதிர்ப்புக்கிடையில் பவுலால் நற்செய்தியை எவ்வாறு அறிவிக்க முடிந்தது? (2:2)

2. பவுலின் அறிவுரைகள் எத்தகையவையாக இருந்தன? (2:3)
3. நற்செய்தியைப் பவுலிடம் தேவன் ஒப்படைப்பதற்குக் காரணம் என்ன? (2:4அ)
4. அறிவிக்கப்பட்ட நற்செய்தி மனிதர்களைப் பிரியப்படுத்த அல்ல என்பது நமக்கு எப்படித் தெரியும்? (2:4ஆ)
5. எதற்கு தேவனே சாட்சி என்று பவுல் கூறுகிறார்? (2:5)
6. அப்போஸ்தலருக்கும், தெசலோனிக்கேயருக்கும் இடையில் இருந்த உறவு எத்தகையது? (2:7)
7. நற்செய்தியோடு வேறெதைக் கொடுக்க பவுல் ஆவலாக இருந்தார்? (2:8)
8. பவுல் பிழைப்பதற்காக வேலை செய்து கொண்டே நற்செய்தியைப் பறைசாற்றியதற்கு அடிப்படைக்காரணம் என்ன? (2:9)
9. எவற்றிற்குத் தேவனும் சாட்சி, தெசலோனிக்கேயரும் சாட்சி என்று பவுல் குறிப்பிடுகிறார்? (2:10)
10. தெசலோனிக்கேயர் அப்போஸ்தலரால் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள்? (2:10)
11. தெசலோனிக்கேயர் தேவனால் எதற்கென அழைக்கப்பட்டார்கள்? (2:12)
12. தெசலோனிக்கேயர் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொண்ட விதம் என்ன? (2:13 அ)
13. எதற்காக அப்போஸ்தலர் தேவனுக்கு இடைவிடாது நன்றி கூறினார்கள்?(2:13அ)
14. நாம் நம்பிக்கை கொண்டோமெனில் தேவனுடைய வார்த்தை நம்மில் என்ன செய்யும்? (2:13இ)
15. தெசலோனிக்கேயர் யாரால் துன்புறுத்தப்பட்டார்கள்? (2:16அ)
16. யூதர் எதைத்தடுத்தார்கள்? (2:16அ)
17. அதனால் அவர்களுக்கு என்ன நேரிட்டது? (2:16ஆ)
18. ஊழியத்தில் நேரடி சந்திப்பு மிகவும் முக்கியமானது என்பதை நாம் எவ்வாறு அறிந்து கொள்ளுகிறோம்? (2:17,18)
19. இயேசுவின் வருகையின் போது தெசலோனிக்கேயர் அப்போஸ்தலருக்கு எப்படி இருக்கப் போகிறார்களாம்? (2:19)
20. சபையாரால் ஊழியர்களுக்கு என்ன கிடைக்க வேண்டும்? (2:20)

**அதிகாரம் 3**

1. பவுல் தெசலோனிக்கே சபைக்கு அனுப்பப்பட்ட தீமோத்தேயுவை எவ்வாறு அறிமுகம் செய்கிறார்? (2:20)
2. தீமோத்தேயு தெசலோனிக்கே சபைக்கு எதற்காக அனுப்பப்பட்டார்? (3:3)
3. அப்போஸ்தலர் தெசலோனிக்கே சபையாரோடு இருந்தபோது அவர்களுக்கு என்ன சொல்லியிருந்தார்கள்? (3:4)
4. தீமோத்தேயுவை தெசலோனிக்கே சபைக்கு அனுப்புவதற்குக் காரணமாக இருந்த அப்போஸ்தலருடைய அச்சம் என்ன? (3:5)
5. அப்போஸ்தலரிடம் திரும்பி வந்த தீமோத்தேயு தெசலோனிக்கேய சபையைக் குறித்து கொடுத்த அறிக்கை என்ன? (3:5)
6. அப்போஸ்தலரால் சபையார் ஆறுதலடைய, சபையாரால் அப்போஸ்தலர் ஆறுதலடைய முடியுமா? (3:7 அ)
7. எதைக்கண்டு அப்போஸ்தலர் ஆறுதல் அடைந்தார்கள்? (3:7ஆ)



8. எதை அறிந்தது தங்களுக்கு உயிர் வந்ததைப் போல் இருந்தது என்று பவுல் கூறுகிறார்? (3:8)
9. சபையாரின் பொருட்டு தேவனுக்கு செலுத்த விரும்பிய நன்றியை பவுல் எவ்வாறு வர்ணிக்கிறார் (3:9)
10. அப்போஸ்தலரின் ஜெபத்தில் இடம் பெற்ற முக்கியமான ஜெபக்குறிப்புகள் என்னென்ன? (3:10-13)

**அதிகாரம் 4**

1. பவுல் தெசலோனிக்கே சபையாரிடம் நிறைவாக கேட்டுக்கொண்டது என்ன? (4:1அ)
2. தெசலோனிக்கே சபையார் அப்போஸ்தலரிடமிருந்து கற்றுக்கொண்டது என்ன (4:1அ)
3. தெசலோனிக்கே சபையாரைக் குறித்த தேவனுடைய சித்தம் என்ன? (4:1)
4. பவுல் தெசலோனிக்கே சபையாருக்குக் கொடுத்திருந்த எச்சரிப்பு என்ன? (4:4-6)
5. தேவன் நம்மை எத்தகைய வாழ்வுக்கு அழைத்திருக்கிறார்? (4:7)
6. தூய வாழ்வுக்கான கட்டளையைப் பறக்கணிபோர் உண்மையில் யாரைப் புறக்கணிக்கிறார்கள்? (4:8)
7. தெசலோனிக்கே சபையார் அவர்களாகவே தேவனிடமிருந்து கற்றுக்கொண்டது என்ன? (49ஆ - 10ஆ)
8. தெசலோனிக்கே சபையார் எதில் முன்னேற வேண்டும் என்று பவுல் கேட்டுக்கொள்கிறார்? (4:10ஆ)
9. திருச்சபைக்கு வெளியே இருப்பவர்களின் நன்மதிப்பை சபையார் எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்? (4:11,12)
10. இறந்தோரைப் பற்றி யார் துயரற்றிருப்பார்கள்? (4:13)
11. இறந்தோரை தேவன் யாரோடு அழைத்து வருவார்? (4:14)
12. எத்தகைய வார்த்தைகளைச் சொல்லி ஒருவரை ஒருவர் தேற்ற வேண்டுமென்று பவுல் கூறுகிறார்? (4:15-17)

**அதிகாரம் 5**

1. ஆண்டவர் மீண்டும் வரும் நாள் எப்படி இருக்கும் என்று பவுல் கூறுகிறார்? (5:1-3)
2. தெசலோனிக்கே சபையாருக்கு இயேசுவின் இரண்டாம் வருகை திருடனைப் போல ஏன் வராது என்று பவுல் கூறுகிறார்? (5:4)
3. ஒளியின் பிள்ளைகள் எதை அணிந்து கொள்வார்கள்? (5:8)
4. தேவன் நம்மை எதற்கென்று ஏற்படுத்தியுள்ளார்? (5:9)
5. நாம் இருந்தாலும், இறந்தாலும் யாரோடு நாம் இணைந்து வாழ்வோம்? (5:10)
6. மேற்கூறிய நம்பிக்கையின் அடிப்படையில் நாம் செய்ய வேண்டியது என்ன? (5:11)
7. யாரை மதித்து நடக்க வேண்டுமென்று தெசலோனிக்கே சபையாரைப் பவுல் கேட்டுக் கொள்கிறார்? (5:12,13)
8. அப்போஸ்தலர் தெசலோனிக்கே சபையாருக்கு வழங்கிய அறிவுரைகளை பட்டியலிடுங்கள் (5:14-22)
9. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நாம் முழுமையாகக் காக்கப்படுவது என்பது எதைக் குறிக்கிறது? (5:23,24)
10. நிறைவாக பவுல் தெசலோனிக்கே சபையாரை என்னென்ன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்? (5:25-27)

## ஆவிக்குரிய கண்ணோட்டத்தில்

இப்புத்தகம் சபையினரின் உறுதியான விசுவாசத்தை மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறது. (1-6) அவர்கள் பவுலின் நற்செய்தியை தழுவியவர்களாக ஜீவனுள்ள தேவனிடம் விசுவாசம் கொண்டார்கள் (1:10). தேவனை அறியாதவர்களுக்கு இருந்த மூட நம்பிக்கைகயையும், பாரம்பரியங்களையும் விட்டு அவர்கள் விலகியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது (4-4,5) அவர்களுக்கு இரண்டு வகையான எதிர்ப்புகள் இருந்தன. ஒன்று பவுலின் புறவினத்தார் ஊழியத்தை விரும்பாத யூதரிடம் இருந்து வந்த எதிர்ப்பு. (2-2, 14-16). தேவனுக்கு சத்துருக்களாக இருப்பவர்களால் சபைக்கு உபத்திரவம் வரத்தான் செய்யும். அத்தகைய எதிர்ப்பானது நற்செய்திக்கு எதிரானது என்று கூறுவதுவிட தேவனுடைய பணிக்குத் தடை செய்வதாகவே பெரும்பாலும் இருக்கிறது. (2-15). அதனால் பவுல் விசுவாசிகள் சோதனைகளை அபூர்வமானவைகள் என்று கருத இடமில்லை என்று கூறுகிறார் (3-3). சுருங்ககூறின், இந்த நிருபம் சபையாரின் ஆன்மீகத்தைப் பற்றியது. அவர்கள் தேவனுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களாக மாறினார்கள் (1-1,9-10). மேலும் விடாமுயற்சியிலும், பொறுமையிலும் மக்கதொனியா மற்றும் ஆசியாவிலுள்ள மற்ற கிறிஸ்தவ ஐக்கியங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் இருந்தார்கள் (1-6-8). இந்த நிருபத்தில் 'தேவனுடைய குடும்பம்' எனும் சொல் குறைந்தது 17 முறை வருகிறது. விசுவாசிகள் அனைவரும் இறைமைந்தனின் இரண்டாவது வருகைக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறலாம். (2-9). இரண்டாம் வருகையின் போது தாங்கள் குற்றமற்றவர்களாகக் காணப்பட வேண்டும் என்பதே விசுவாசிகளின் குறிக்கோலாக இருக்கிறது (4-13, 5-23). இருப்பவர்களானாலும், இறந்தவர்களானாலும் எல்லோருமே கிறிஸ்துவுடன் ஜீவிக்கிறவர்கள் என்பதும் நிருபத்தின் முக்கிய செய்தியாகும். (5-11)

## தேவை ஜெபியுங்கள்

ஆலயமில்லாத கிராமங்களில் நற்செயதி கூட்டங்கள், வாலிபர், சிறுவர் முகாம்கள் நடத்த மின்சார ஜெனரேட்டர்கள் தேவை. ஒரு ஜெனரேட்டரின் மதிப்பு ரூ. 60,000/- இரண்டு ஜெனரேட்டரின் மதிப்பு ரூ. 1,20,000/- தேவையை தாங்க முன் வருகிறவர்களை ஜெபத்துடன் தாங்க அழைக்கிறோம்.


**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**

**தேவனுடைய கூடாரத்தின் 20வது பிரதிஷ்டை தினமும் திறப்பின் வாயில் ஜெபமும்**

2013 அக்டோபர் 30 கடைசி புதன் - காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய

*தேவசெய்தி :* **சகோ. P. சாம்ராஜ்** ரேமா ஊழியங்கள், நெல்லை

**சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**

நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்!

இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!

கூட்டம் முடிந்தவுடன் அன்பின் விருந்து உண்டு

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை-626 201. போன் 04562-258194




## V.B.S. 2013 நடைபெற்ற கிராமங்கள் பெயர்சொல்லி ஜெபியுங்கள்

இந்த ஆண்டு V.B.S. நடைபெற்ற இடங்களின் பட்டியலில் ஒரு பகுதியை சென்ற மாதம் உங்கள் ஊக்கமான ஜெபத்திற்காக தந்திருந்தோம். அதன் தொடர்ச்சி கீழே பார்க்கிறீர்கள். V.B.S. நடைபெற்ற இடங்களிலெல்லாம் சுவிசேஷத்தை அறிந்த சிறியோர், பெரியோர் எல்லோரும் தேவனை நோக்கி திரும்பும் படியாகவும் நல்ல நிலத்தில் விழுந்த விதையைப் போல வேத வசனம் அவர்கள் உள்ளத்தில் செழித்தோங்கும்படியாகவும் நாம் தேவனுடைய பாதத்தில் ஜெபித்து காத்திருப்போம்.

| | | |
|---|---|---|
| பணித்தளம் : **வெத்தியார்வெட்டு** | 280 பெரியநாயகபுரம் - வடக்கு தெரு | 290 மேலப்பட்டி |
| 271 வெத்தியார்வெட்டு | 281 பெரியநாயகபுரம் - தெற்கு தெரு | பணித்தளம் : **சிவகாசி** |
| 272 இளைய பெருமாள் நல்லூர் | பணித்தளம் : **பழைய அப்பனேரி** | 291 கீழ ஒட்டம்பட்ட காலனி |
| 273 பிச்சனூர் | 282 பழைய அப்பனேரி | 292 கீழ ஒட்டம்பட்டி |
| 274 சலூப்பை | 283 பழைய அப்பனேரி காலனி | 293 கோணம்பட்டி |
| பணித்தளம் : **பெரியநாயகபுரம்** | 284 சித்திரம்பட்டி | பணித்தளம் : **பழைய செந்நல்குளம்** |
| 275 காலாங்கரை | 285 சித்திரம்பட்டி காலனி | 294 பழைய செந்நல்குளம் |
| 276 ஆபிரகாம்நகர் (பெரியநாயகபுரம்) | 286 சாமிதேவன் பட்டி | 295 புதிய செந்நல்குளம் |
| 277 சோரீஸ்புரம் | 287 அவல்நத்தம் | 296 கன்னார்பட்டி காலனி |
| 278 பொன்னகரம் | 288 புது அப்பனேரி | 297 புள்ளையார் குளம் |
| 279 கோரம்பளளம் | 289 பிள்ளையார் நத்தம் | 298 மேட்டூர் |
| | | 299 இராமகிருஷ்ணாபுதூர் |
| | | 300 கோபாலபுரம் |

## செய்திகள்...

- பள்ளிகளுக்கு மாணவ மாணவிகள் செல்போன் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 35,000 தொடக்கப்பள்ளிகள், 10,000 நடுநிலைப் பள்ளிகள், 5,500 உயர்நிலைப்பள்ளிகள், 5,800 மேல்நிலைப்பள்ளிகள் உள்ளன. இங்கு 6 இலட்சம் ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள். ஒரு கோடியே 50 லட்சம் மாணவ மாணவியர் கல்விப் பயிலுகின்றனர். 9 முதல் +2 வரை 50 இலட்சம் பேர் பயிலுகின்றனர்.
- உலக அளவில் 48 இலட்சம் கோடி உணவுப்பொருட்கள் வீணாகின்றன. உலகில் தினமும் 87 கோடி பேர் பசியால் வாடுகின்றனர். சர்வதேச அளவில் உணவு பொருள் வீணாவதால், 75,000 கோடி டாலர் அளவிற்கு இழப்பு ஏற்படுகிறது. இது நமது உள்நாட்டு உற்பத்தி அளவில் 50 சதவீதம் ஆகும். உலக அளவில் உற்பத்தியாகி உண்ணாமல் வீணாகும் உணவுப் பொருள்களின் அளவு மொத்த உற்பத்தியில் 33 சதவீதம் ஆகும். உணவு பொருட்களை வீணடிப்பதில் சீனா முதலிடம் வகிக்கிறது. 130 கோடி டன் உணவுப்பொருள் விணாகிறது. உணவுப்பொருட்களை வீணடிப்பதில் ஆசியா கண்டம் முதலிடத்தில் உள்ளது. ஆசியாக்கண்டத்தில் ஒரு தனி மனிதரால் ஆண்டுக்கு சராசரி 100 கிலோ காய்கறி வீணடிக்கப்படுகிறது. ஒரு ஆண்டில் 80கிலோ தானியம் ஒரு தனி நபரால் வீணடிக்கப்படுகிறது. உலகளவில் சுமார் 140 கோடி ஹெக்டர் நிலத்தில் சாகுபடியாகும் உணவுப்பொருட்கள் வீணாகின்றன. இது மொத்த சாகுபடி நிலத்தில் 28 சதவீதம் ஆகும். நம்நாட்டில் சேமிப்பு கிடங்கு வசதி போதிய அளவு இல்லாததால் அறுவடைக்குப்பின் ஆண்டுக்கு 2 இலட்சம் கோடி மதிப்பிற்கு பழம் மற்றும் காய்கறி வீணாகின்றன.

## V.B.S. 2013 - தன்னார்வ ஊழியர்கள்

இந்த ஆண்டு V.B.S. பணியில் இணைந்து தன்னார்வமாக பணியாற்றிய சகோதரர், சகோதரிகள் பெயர் பட்டியலை உங்கள் ஊக்கமான ஜெபத்திற்காக தந்துள்ளோம். இவர்களில் பலர் பல ஆண்டுகளாக நமது V.B.S. ஊழியத்தில் ஆலயமில்லா கிராமத்தில் நம்மோடு இணைந்து செயலாற்றி வருகிறவர்கள். சிலர் இந்த ஆண்டு புதிதாகவும் இணைந்து செயலாற்றி உள்ளனர். இணைந்து செயலாற்றிய தன்னார்வ ஊழியர்கள் பெயர்கள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. தேவன் இவர்களை பெலப்படுத்த ஆசீர்வதிக்க தொடர்ந்து ஊழியங்களில் ஆசீர்வாதமாய் பயன்படுத்த ஜெபியுங்கள்.

| | | |
|---|---|---|
| பணித்தளம் : **வெத்தியார்** | 184 Sis. J. ரத்னஜோதி | பணித்தளம் : **சிவகாசி** |
| **வெட்டு** | 185 Sis. ஜெயராணி | 192 Bro. A. ஞானமணி |
| 175 Sis. நிஷா | 186 Sis. P. ஜான்ஸி | 193 Sis. S. ஏஞ்சல் |
| 176 Sis. அம்பிகா | 187 Sis. D. ஜெபா | 194 Sis. P. சௌமியா |
| 177 Sis. ரோஸ்லின் மேரி | 188 Sis. M. பீனா | 195 Sis. G. நித்யா |
| 178 Sis. அமலி | பணித்தளம் : **பிரமுத்துவிளை** | பணித்தளம் : **பழைய** |
| 179 Sis. பிரியா | 189 Sis. ரோஸ்லின் இளவரசி | **செந்நெல்குளம்** |
| 180 Bro. தங்கராஜ் | 190 Sis. S. ஜெனி | 196 Bro. S. ரமேஷ் |
| 181 Bro. ராஜேந்திரன் | பணித்தளம் : | 197 Bro. M. சதீஸ் |
| 182 Bro. ரவி | **பெரியநாயகபுரம்** | 198 Sis. R. தெபோராள் |
| பணித்தளம் : **தாளமுத்துநகர்** | 191 Sis. முத்து ஜெபசெல்வி | 199 Sis. R. ராஜு |
| 183 Sis. J. ஷீலா | | 200 Sis. B. சுபாஷினி |

## *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

கடிதம் மற்றும் M.O. அனுப்ப தொடர்பு முகவரி :

**சகோ. B. பொற்செல்வன் ஆசீர்**

**கிருபையின் ஊழியங்கள்,** ஆபிரகாம் நகர், பெரியநாயகபுரம், தூத்துக்குடி-628 101.

Grace Ministries, Abraham Nagar, Periyanayagapuram, Tuticorin-628 101.

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.



## *பணித்தளங்களுக்காய் முழங்காலில்*

### தூத்துக்குடி மாவட்டம்

பணித்தளம் : **பட்டாண்டிவிளை** – சுபா என்ற தங்கையின் தகப்பனார் பேச்சிமுத்து இவருக்கு கிட்னி பிரச்சனை மாறி குடும்பமாய் இரட்சிக்கப்பட, சுந்தர்ராஜ் குடிப்பழக்கம் மாறி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

பணித்தளம் : **திருக்களூர்** – மானாட்டூரில் உள்ள வசந்தி என்ற சகோதரிக்கு வயிற்றில் இரண்டு அறுவைசிகிச்சை நடந்துள்ளது. புண்கள் நன்றாக ஆறவும், இவர்களுக்கு 4 பெண் குழந்தைகள் இருக்கிறார்கள் இந்த குடும்பத்தின் ஆசீர்வாதங்களுக்காய் ஜெபிப்போம்.

பணித்தளம் : **பேட்மாநகரம்** – இங்கு ஆலயம் கட்டுவதற்கான வேலைகள் தொடங்கப்பட காணப்படும் தடைகள் மாற ஜெபிப்போம்.

**பேரூர்** – சகோதரி முத்துவிற்கு கர்ப்பத்தின் கனி கிடைக்கவும் ஜெபிப்போம்.

பணித்தளம் : **தாதன்குளம்** – சகோதரி. சுமதி குடும்பம் இரட்சிக்கப்பட.... வள்ளுவர் காலனியில் தொடர்ந்து தடையில்லாமல் ஆராதனை நடைபெற.... புதிய ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**தூத்துக்குடி ரூரல் : தாளமுத்துநகர்** – சகோதரி. ஜாய் திருமணமாகி 10 வருடம் ஆகிறது. குழந்தை இல்லை கர்த்தர் குழந்தை பாக்கியம் அருளவும், சகோதரி கெங்கேஸ்வரிக்கு திருமணமாகி 14 வருடம் ஆகியும் குழந்தை இல்லை தேவன் குழந்தை பாக்கியம் அருள ஜெபிப்போம்.

பணித்தளம் : **புதுக்கோட்டை** – பண்ணைவிளையில் மாணவர் முகாம் பள்ளியில் நடைபெற கர்த்தர் திறந்த வாசலைத் தர ஜெபிப்போம். வாகைக்குளம் – சகோதரி செல்விக்கு சுகப்பிரசவம் உண்டாக.... குடும்ப முகாம் நடைபெற தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

பணித்தளம் : **ஆண்டாள்நகர்** – ஜெகஜோதி அம்மா வீட்டுப்பத்திரம் காணவில்லை தேவன்தாமே வீட்டுப்பத்திரம் கிடைக்க கிருபை செய்யவும், மார்க்கிரேட் அம்மா வீட்டு கஷ்டம் மாறவும், லட்சம் கடன் அடைக்க தேவன் கிருபை செய்யவும், வியாபாரத்தில் ஏற்பட்ட நஷ்டம் 15 லட்சம் திரும்ப கிடைக்க தேவன் கிருபை செய்ய ஜெபிப்போம்.

பணித்தளம் : **தட்டப்பாறை** – இதுவரை ஆலயத்திற்கு வந்துவிட்டு, தற்சமயம் ஆராதனைக்கு வராமல் பின்வாங்கி இருக்கிற குடும்பங்கள் ஆலய ஆராதனைக்கு வர

பணித்தளம் : **திருப்புளியங்குடி** – இங்கு படித்துவிட்டு வேலையில்லாமல் வேலைக்காக காத்திருக்கிறவர்களுக்கு தேவன் வேலை வாய்ப்புகளை கொடுக்க ஜெபிப்போம்.

**ஸ்ரீமூலக்கரை** – சகோதரர் மாரிமுத்துவிற்கு பூரண சுகம் கிடைக்க, குடும்ப பிரச்சனைகள் மாற ஜெபிப்போம்.

### திருநெல்வேலி மாவட்டம்

பணித்தளம் : **அழகப்பபுரம்** தங்கமுத்து குடிப்பழக்கத்திலிருந்து மனந்திரும்பி இரட்சிக்கப்பட, சகோதரி நித்தியாவிற்கு கண்ணில் உள்ள பெலவீனம் மாற, பின்வாங்கிப் போன மக்கள் மறுபடியும் ஆலயத்திற்கு வருவதற்காக ஜெபிப்போம்.

**மைப்பாறை** – அமுதா சகோதரியின் நிலம் வேறொருவர் அபகரித்து விட்டார். அந்த நிலத்தை திரும்பப் பெற்றுக்கொள்ள, ஞானசௌந்தரி ஆஸ்மா வியாதியிலிருந்து சுகம் பெற, ஜெபியுங்கள்.

**திருவேங்கடம்** – ஆவுடையாபுர கிராமத்தில் ஞாயிறுபள்ளியில் கலந்து கொள்ளும் பிள்ளைகள் இயேசுவை ஏற்றுக்கொள்ள, தேவபிச்சையின் மகன் திருமணம் தடையின்றி நடைபெற.... சின்னக்காளான்பட்டி கிராமத்தில் ஆலயம் கட்டுவதற்கான மணல், செங்கல், தண்ணீர் தடையின்றி கிடைக்க ஜெபியுங்கள்.

**அய்யனேரி** – பாலசங்கருக்கு மஞ்சள் காமாலையிலிருந்து பூரண சுகம் கிடைக்க, சாந்தா சகோதரியின் மூளையில் உள்ள கட்டி மறைய, பிரேம்குமார், ரோஸலின், ஆனந்தா, எலிசபெத் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

### விருதுநகர் மாவட்டம்

பணித்தளம் : **சிவகாசி – NGO காலனி** – செலஸ்டா சகோதரிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, முத்துச்சாமிபுரம் ஆராதனைக்கு புதிய ஆத்துமாக்கள் கடந்து வர ஜெபியுங்கள்.

பணித்தளம் : **பண்டுதன்பட்டி** – ஆலயத்தைச் சுற்றிலும் உள்ள மனித எதிர்ப்பின் கிரியை அழிக்கப்பட, அவர்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். அருணா சகோதரி ஆலயத்திற்கு கடந்துவர, ஞானஸ்நானம் எடுக்க ஜெபியுங்கள்.

பணித்தளம் : **N. திருவேங்கிடபுரம்** – ராஜன் சகோதரர் குடிப்பழக்கத்திலிருந்து விடுவிக்கப்பட, கன்னித்தேவன்பட்டி கிராமத்தில் ஆலய கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட, தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

பணித்தளம் : **ஜமீன்சல்வார்பட்டி** – ஆலயத்தின் தேவைகள் ஸ்பீக்கர் பாக்ஸ் சந்திக்கப்பட, ஆலய ஆராதனைக்கு புதிதாக வரும் குடும்பங்கள் தடையின்றி தொடர்ந்து வர, கருப்பசாமி, முத்துசாமி, அய்யனார், கூடாண்டி, பசுபதி, முருகன் ஆகியோர் இரட்சிக்கப்பட

பணித்தளம் : **முத்தாண்டியாபுரம்** – சசிகுமார் குடிப்பழக்கத்திலிருந்து விடுவிக்கப்பட பிரவினா, ஜெயந்தி சகோதரிகளுக்கு கர்ப்பத்தின் கனியை தேவன் ஆசீர்வதித்து தரும்படியாக....

பணித்தளம் : **புல்லக்கவுண்டன்பட்டி** – சுமதி சகோதரியின் வீட்டு வேலை நிறைவாய் கட்டிமுடிக்கப்பட, கர்த்தருக்கென்று கொடுக்கிற குடும்பங்களில் நன்மை உண்டாக...

பணித்தளம் : **புல்லலக்கோட்டை** – ஆலயத்தைச் சுற்றிலும் காம்பவுண்ட்சுவர் கட்டப்பட, ஆராதனையில் கலந்துகொள்ளும் வாலிப பிள்ளைகளுக்கு ஏற்ற காலங்களில் திருமண காரியம் நடைபெற.... அழகேசன், செல்வி இருவரும் ஞானஸ்நானம் எடுக்க கர்த்தருக்குள் நிலைக்கப்பட

பணித்தளம் : **7000 பண்ணை** – முத்துமாரி சகோதரியின் 3 செண்ட் சொந்த இடத்தில் தடையின்றி வீடுகட்டி முடிக்கப்பட, துஷ்யந்த் சகோதரனின் தகப்பனார் குடியிலிருந்து விடுவிக்கப்பட ஜெபியுங்கள்.

பணித்தளம் : **சாத்தூர்** – பின்வாங்கிப்போன விசுவாசிகள் மீண்டுமாக ஆராதனைக்கு கடந்துவர, சகோதரி ஆர்த்தி கணவருடன் இணைந்து வாழ....

பணித்தளம் : **பழைய அப்பனேரி** – சங்கரி அவர்களின் கடன் பிரச்சனை மாற, கோபாலகிருஷ்ணன் இரட்சிக்கப்பட, சசிகலா அவர்களின் திருமண காரியம் தடையில்லாமல் நடைபெற, பணத்தேவைகள் சந்திக்கப்பட....

### திருச்சி மாவட்டம்

பணித்தளம் : **தோப்புப்பட்டி** – கருப்பசாமி சகோதரன் தகப்பனார் குடிப்பழக்கத்தில் இருந்து விடுவிக்கப்பட, மனுவேல் சகோதரனுக்கு ஆஸ்மா வியாதியிலிருந்து விடுதலை பெற ஜெபியுங்கள்.



### அரியலூர் மாவட்டம்

பணித்தளம் : **வெத்தியார் வெட்டு (மிஸ்பா)** – செந்தாமரை சகோதரியின் தொண்டைப் பகுதியில் காணப்படும் கேன்சர் வியாதி மாற.... மைதிலி, ரவி, வடிவழகன் சரத்குமார் ஆகியோர் இரட்சிக்கப்பட....

### மதுரை மாவட்டம்

பணித்தளம் : **திரளி** – மாணிக்கம், செல்லப்பாண்டி ஆகியோர் ஆராதனைக்கு வர.... தடைகள் மாறி, வீட்டிலிருந்து வேதத்தை வாஞ்சையாய் படிக்கிறவர்கள் ஆராதனைக்கு கடந்து வர.... மீனாட்சிபுரம், கிழவனேரி ஆகிய கிராமங்களில் ஆராதனைக்கு வரும் குடும்பங்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். ஆலய குறை வேலைகள் நிறைவாய் செய்து முடிப்பதற்கு தேவை சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

## *தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

**நாள் : 2013 அக்டோபர் 29 – கடைசி செவ்வாய்**

**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

**இடம் : காமராஜர் திருமண மண்டபம்,**
**பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.**

*தேவசெய்தி :* **சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**

### கட்டப்பட்டுவரும் ஆலயங்களுக்காக ஜெபியுங்கள்

தூத்துக்குடி மாவட்டம் திருப்புளியங்குடி, வேம்படிவிளை மிஷனெரி ஜெப ஆலயம் கட்டிடப்பணி முடிந்து பூச்சு வேலை 50 சதவீதம் முடிந்துள்ளது. மீதமுள்ள பூச்சு வேலை, தளம் போடுதல், வயரிங் வேலை, ஜன்னல் மற்றும் வாசல் கதவுகள் அமைக்கப்பட வேலைகள் முடிக்கப்பட ஜெபியுங்கள். தாங்குங்கள்.

நெல்லை மாவட்டம், சின்னக்காளான்பட்டி மிஷனரி ஆலய பணி அஸ்திபார வேலைகள் நடைபெற்று வருகின்றன. வேலைகள் தொடர்ந்து தடையில்லாமல் நிறைவேற்றி முடிக்கப்பட ஜெபியுங்கள்.

தூத்துக்குடி மாவட்டம், பேட்மா நகரம் மிஷனெரி ஆலய கட்டிடப்பணி அனுமதி பெறப்பட்டுள்ளது. சர்வே பணி முடிக்கப்பட்டு, ஆலயக் கட்டிடப்பணி தொடங்கப்பட உள்ளது. ஜெபியுங்கள்.

### கட்டப்பட வேண்டிய ஆலயங்களுக்காக ஜெபியுங்கள்.

1. நள்ளி, விருதுநகர் மாவட்டம் 2. கன்னித்தேவன்பட்டி, விருதுநகர் மாவட்டம்
3. தொட்டிப்பாளையம், திருப்பூர் மாவட்டம்

இந்த மூன்று இடங்களிலும் கட்டிட அனுமதி பெற தேவன் கிருபை பாராட்டியுள்ளார். ஆலய கட்டுமானத்தை தாங்குகிற மக்கள் முன்வர ஜெபியுங்கள்.

### ஆலய கட்டிட அனுமதி கிடைக்க ஜெபியுங்கள்

1. திருவேங்கடம், நெல்லை மாவட்டம் இங்கு மிஷனெரி இல்லம் கட்டப்பட்டுவிட்டது. மிஷனெரி ஆலயம் கட்ட கலெக்டர் அனுமதி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தாமதிக்கப்படுகிறது. தடைநீங்க ஜெபியுங்கள்.
2. அய்யனேரி, தூத்துக்குடி மாவட்டம் இங்கு ஆலயம் கட்ட அனுமதி தர மூன்று ஆண்டுகளாக தாமதிக்கும் பஞ்சாயத்து தலைவர் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.